Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.No. 11/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.07 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஹேமாவதி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. வீரசிவாஜீ | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 05th day of February 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை )**

நான் தற்போது மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 06.11.2022 அன்று நான் திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது , தூய நெஞ்சக்கல்லூரில் எதிரில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது, TN 04 Aw 2412 என்ற பதிவெண் கொண்ட சுசுகி ஆக்சிஸ் இருசக்கர வாகனத்தில் வந்த நபரை விசாரித்த போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். பின்னர் அவரை விசாரித்த போது அவர் திருப்பத்தூர் நகர காவல் நிலைய குற்ற எண். 248/2022 ல் ஈடுபட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவரது ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் ஜோலார்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 183/2022 ல் ஈடுபட்டதாக தெரிவித்தார். மேலும், ஜோலார்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 183/2022 க்கு உண்டான சுமார் 4 1/2 சவரன் ஆரம் மற்றும் 1/2 சரவன் கம்மல் சதை ஒன்றும், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி அருகே வாகனதணிக்கையில் யார் யார் ஈடுபட்டார்கள் என்பதற்கு ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமானது காவல் நியைத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், தூய நெஞ்சக்கல்லூரி அருகே வைத்து எழுதப்படவில்லை என்றாலும், சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் எழுதினேன். வாகனத்தணிக்கையில் ஈடுபட்ட இடம் ஆனது கூட்ட நெரிசல் மிக்க பகுதி என்றால் சரிதான். அங்கிருந்த வணிக வளாகத்தில் உள்ள சாட்சிகளை நான் ஒப்புதல் வாக்குமூலசாட்சிகளாக விசாரித்திருக்கலாம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உள்ள ஒப்புதல் வாக்குமூலசாட்சிகள் வெவ்வேறு இடத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் எங்கள் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. என்னுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்ட சக அதிகாரிகளை நான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து கைப்பற்றபட்ட தங்க ஆபரணங்கள் ஆனது ABS சர்வீஸ் சென்டர் என்ற இடத்தில் இருந்து கைப்பற்றபட்டுள்ளது என்றாலும், அங்கு உள்ளவர்களை நான் சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான் யாரும் முன்வரவில்லை. அந்த இடத்தில் வைத்து எத்தனை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். நான் சொன்ன இடத்தில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்திருந்தால் ஜோலார்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 183/2022 குறிப்பிட வாய்பில்லை என்றாலும், எனவே நான் காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளது புலப்படுகிறது என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக ஆவணம் தயார் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Date: 2026.02.12 14:34:11 +0530

Witness sign

Judicial Magistrate No.1
Thirupattur.